17th March 1955]

SRI N. K. PALANISAMY :—" ஏற்கெனவே ஒரு சட்டம் இருக்கிறது. வெளி ராஜ்யங்களிலிருந்து மொலாஸஸ் இந்த ராஜ்யத்திற்கு இறக்குமதி செய்வது என்றால் அதற்கு சர்க்காரிடமிருந்து அனுமதி பெறவேண்டும் என்று இருக்கிறது. அம்மாதிரி அனுமதி கொடுப்பதை சர்க்கார் தளர்த்த உத்தேசித்திருக்கிறார்களா அல்லது அடியோடு ஒழித்துவிடவே உத்தேசித்திருக்கிறார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இதற்குப் பதிலளிக்க ஒரு தனிக் கேள்வி போடவேண்டும்."

SRI V. BALAKRISHNAN :—" மொலாஸெஸ் சாப்பிடுகிற காளைகள் எல்லாம் தென்னாற்காடு ஜில்லாவில் அடங்காப்பிடாரிகளாக சுற்றிக் கொண்டிருக்கின்றன என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிகிற விஷயங்கள் எல்லாம் எனக்கு எப்படித் தெரியும் ?"

SRI M. KALYANASUNDARAM :—"சர்க்கார் சொல்லக் கூடியது வேறு பொருளை பற்றியிருக்கும். நம் ராஜ்யத்தில் மொலாஸெஸ் என்ற பெயரில் விற்கப்பட்டு வரும் பொருள்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்கு மிகவும் உதவியாக இருக்கிறதென்று தெரியவருகிறது. ஆகையால் இதை சர்க்கார் கட்டுப்படுத்த தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கும்."

* 1410 Q.—

MR. SPEAKER :—" I shall take up this question on Monday. The hon. Member Sri P. G. Manickam has written to me requesting that it may be taken up on Monday."

Supply of rice to Karaikal.

* 1411 Q.—

MR. SPEAKER :—" The hon. Member is not in his place. The answer together with the question will be printed in the proceedings."

SRI A. RATNAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the arrangements, if any, made by this State Government to supply sufficient rice to Karaikal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" At present, there are no restrictions on the movement of foodgrains and other provisions from places in Madras State to places in the former French Settlements in India. The question of making any arrangements to supply sufficient rice to Karaikal, therefore, does not arise."

* 1412 Q.—SRI K. P. GOPALAN :—" I am not putting the question, Sir."

Local Development Works.

* 1413 Q.—

MR. SPEAKER :—" The hon. Member is not in his place. The answer together with the question will be printed in the proceedings."